Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

**H.M.OP.** 4 /2024

பெயர்:- **பெரியசாமி** நாள்: 30.01.2026

எ.ம.சா. 2 ஆஜர். சத்திய பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

எ.ம.சா.2 குறுக்கு விசாரணை :-

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மளிகை கடை மற்றும் ஜவுளி தொழில் செய்து வருகிறேன். எனக்கு எதிர்மனுதாரர் மற்றும் அவரது தந்தை பழக்கமா என்றால் எனது கடைக்கு வருவதால் பழக்கம். கடைக்கு வரப்போக இருப்பதை தவிர எனக்கும் அவர்களுக்கும் எந்தவிதமான பழக்கமும் இல்லை என்றால் சரிதான். அருண்குமார் குடும்பத்துடன் பழக்கமா என்றால் அவரும் கடைக்கு வருவார் பக்கத்து ஊர்க்காரர் பழக்கம்தான். அருண்குமார் பழக்கமா அல்லது அவரது குடும்பத்துடன் பழக்கமா என்றால் அவரது குடும்பத்துடன் பழக்கம். ரேணுகா எனது கடையில் எத்தனை வருடம் வேலை பார்த்தார் என்றால் சுமார் 5 வருடம் வேலை பார்த்தார். அருண்குமாரின் தாயார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அருண்குமார் அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அருண்குமாரின் ரேணுகாதேவியும் திருமணத்திற்கு முன்பு ஒரு வகையில் உறவினர்கள் என்றால் ஆமாம். அத்தை மகள் மாமன் மகன் உறவு. அருண்குமார் குடும்பமும் ரேணுகா குடும்பமும் திருமணத்தின் போது என்னை முன் வைத்து செய்தார்களா என்றால் ஆமாம். இருவரும் விருப்பபப்படுவதாக சொன்னார்கள் அதனால் இருதரப்பு பெற்றோர்களையும் அழைத்து பேசினேன். அருண்குமாரின் அம்மா பையனின் விருப்பம் என்றாலும் ஜாதகம் பார்த்து தான் திருமணம் செய்ய வேண்டும் என்று கூறினார். ஜாதகம் பார்த்து சரியாக இருந்ததால் அருண்குமாரின் அம்மா திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார். திருமணத்திற்கு முன்பு அருண்குமாரின் அம்மா

P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.01.30 16:51:49 +0200

பையன் விருப்பப்பட்டதால் பணம் நகை எதையும் எதிர் பார்க்காமல் திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார். திருமணத்திற்கு முன்பு அவர்கள் ஜாதி வழக்கப்படி செய்ய வேண்டிய உறுதி வார்த்தை நிச்சயதார்த்தம் சீர் வரிசை போன்றவற்றை செய்தார்கள் அப்போது எந்த பிரச்சனையும் இல்லை. பிரியமாகத்தான் இருந்தார்கள். திருமணத்தின் போது அருண்குமாரின் அம்மா ரேணுகா மீது பிரியமாகத்தான் இருந்தார்களா என்றால் ஆமாம். மிகவும் பிரியமாகத்தான் இருந்தார்கள். ரேணுகாவின் திருமணத்திற்கு முன்பு எத்தனை நாட்கள் முன்பு வேலையை விட்டு நின்றார்கள் என்றால் சுமார் 1 மாதத்திற்கு முன்பு. திருமணத்திற்கு பின்பு அவர்களுக்கும் எனக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் ஆமாம். ரேணுகாவிற்கு முதல் குழந்தை பிறந்த போது பார்த்தேனா என்றால் கபார்த்தேன். குழந்தை பிறந்து சிறிது நாள் கழித்து ரேணுகா என் கடையில் வந்து அருண்குமாரின் அம்மா திருமணத்தின்போது எனக்கு போட்ட நகைகள் போதவில்லை என்று கோரி நகைகேட்டு தன்னை நெருக்குவதாக கூறினார். ரேணுகா தான் என்னிடம் வந்து சொன்னார் என்று எனது முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அந்த மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. ரேணுகாவை அருண்குமாரின் தாயார் நான் கூறுவதால் நகை கேட்டிருந்தால் எவ்வளவு பவுன் கேட்டார் எப்போது கேட்டார் என்று விபரங்களை முதல் விசாரணையில் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. ரேணுகாவிற்கு வசதி இல்லை என்று அருண்குமாரின் தாயார் சண்டை போட்டார் என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. கடந்த சில ஆண்டுகளாக ரேணுகா அருண்குமாரிடம் ஜீவனாம்சம் வாங்கி வரும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் வாங்கி வருவது தெரியும். எவ்வளவு என்று தெரியாது. அருண்குமார்தான் அவரது குழந்தைகளுக்கான படிப்பு செலவு, பராமரிப்பு செலவு பார்த்துவருகிறார் என்றால் சரிதான். ரேணுகாவின் தந்தை இறந்த விஷயத்தை கூட அருண்குமாருக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. பத்து பேர் சேர்ந்து அருண்குமார் வீட்டிற்கு சென்று இறப்பு விஷயத்தை கூறி கூப்பிட்டும் அருண்குமாரின் அம்மா அனுப்பவில்லை என்பதால் அவர் வரவில்லை. பத்து பேர் கூப்பிட்டதாக வழக்கிற்காக

P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.01.30 16:51:55 +0200

Copy of Deposition

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரேணுகா செய்த கொடுமைகளால் அருண்குமார் அவருடன் சேர்ந்து வாழாமல் இருக்கிறார் என்றால் சரியல்ல. அருண்குமார் ரேணுகா இருவரும் நல்லவர்கள். அருண்குமாரின் அம்மாவால் தான் இருவரும் பிரிந்து வாழ்கிறார்கள். ரேணுகா என் கடையில் வேலை பார்த்தார் என்று அவருக்கு ஆதரவாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| --- |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.01.30 16:52:02 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |